**பெறுநர்**

மாநில ஆணையர்,
மாநில மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம்
ஜவஹர்லால் நேரு உள்வட்ட சாலை,
**சென்னை** - 600 078

**பொருள்**: மாற்றுத்திறனாளிகளின் நலன் தொடர்பான நடைமுறைகளில்
மாறுதல் செய்யக் கோருதல் தொடர்பாக

**பார்வை**

1) மாற்றுத்திறனாளிகள் நலத் துறை அரசாணை (நிலை) எண் 30 நாள்: 29.06.2012
2) மாற்றுத்திறனாளிகள் நலத் துறை அரசாணை (நிலை) எண் 58 நாள்: 20.04.2012
3) Form for the purpose of Grant of Rail Concession to Completely Blind Persons.
4) மாற்றுத்திறனாளிகள் நலத் துறை அரசாணை (நிலை) எண் 65 நாள்: 14.06.2012

நேத்ரோதையா பார்வையற்றோர் முன்னேற்றத்திற்காக நடத்தப்படும் சமூக சேவை நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் 2002 முதல் பல்வேறு நலத் திட்டங்களை பார்வையற்றோர் வாழ்வு மேம்பட செயல்படுத்தி வருகின்றது. எங்கள் களப்பணியாளர்களின் துணையுடன் சேகரிக்கப்பட்ட தரவுகளை கொண்டும் பார்வை மாற்றுத்திறனாளிகளின் கருத்துகளையும் அடிப்படையாக கொண்டு ஆய்வு செய்ததில் பரிந்துரைகளை மாநில மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு பரிந்துரைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டு பின்வரும் பரிந்துரைகள் அரசுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன.

கீழ்காணும் எங்களது பரிந்துரைகளை கனிவுடன் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறோம்

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

C. கோவிந்தகிருஷ்ணன்

1. **பாட நூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி (Magnifier)**

பார்வை ஒன்றில் கண்டவாறு குறைந்த பார்வையுடைய மாணவ மாணவிகள் தடையின்றி கல்விப் பயில அவர்களுக்கு பாட நூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி (Magnifier) வாங்கி இக்கல்வியாண்டில் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் கடந்த ஜூன் மாதம் முதல் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இரண்டு மாதங்கள் ஆகியும் இன்னும் அக்கருவி (Magnifier) வழங்கப்படவில்லை. மேலும் காலாண்டுத் தேர்வு செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி வாக்கில் தொடங்கவுள்ளது. இதையும் கருத்தில் கொண்டு அக்கருவியை (Magnifier) விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. **ஜாஸ் மென்பொருள் (Jaws Software)**

பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படும் விலை இல்லா மடிக்கணினி அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் சிறப்பு பள்ளிகளில் பயிலும் +1 மற்றும் +2 மாணவர்கள் 220 பேருக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. ஆனால் இந்நாள் வரை மடிக்கணினி வழங்கப்படவில்லை. பார்வை இரண்டில் கண்டவாறு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலமாக மாற்றுத்திறனாளிகள் மடிக்கணினியை எளிதில் பயன்படுத்தும் வகையில் ஜாஸ் என்னும் திரை வாசிப்பு மென்பொருள் (Screen Reading Software) வழங்க ஆணையிடப்பட்டது. இந்நாள் வரையிலும் வழங்கப்படவில்லை எனவே ஜாஸ் மென்பொருளுடன் மடிக்கணினி வழங்க ஆவண செய்ய வேண்டும்.

3. **DVD இயக்கி (DVD Player)**

ஆண்டு தோறும் அரசு சிறப்பு பள்ளிகளில் படிக்கும் பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு CD பிளேயர் மற்றும் பாடங்கள் அடங்கிய ஒலி குறுந்தகடு(Audio CD) வழங்கபட்டு வந்தது. இந்நிலையில் CD பிளேயர்களுக்கு மாற்றாக DVD பிளேயர்கள் வழங்க வேண்டும். பள்ளிகள் திறந்து இரண்டு மாதங்கள் ஆகியும் ஒலி நூல்கள் (Audio Books) வழங்கப்படவில்லை. இந்த நிலையினை மாற்ற DVD பிளேயர்களையும் ஒலி நூல்களையும் உடனடியாக வழங்க ஆணையிட வேண்டும்.

4. **அடையாள அட்டை வழங்குதல்**

அரசின் நடைமுறை கொள்கை ஏட்டின் (Current Policy Note) 8, 52, 555 மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்தாக கூறப்பட்டுள்ளது. பதினாறரை லட்சம் மாற்றுத்திறனாளிகளுள் பாதிக்கும் குறைவான அளவில் அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது. எனவே குறுகிய கால சீரிய திட்டத்துடன் மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க ஆவண செய்ய வேண்டும்.

5. **அடையாள அட்டை வழங்குதலை எளிமைப்படுத்துதல்**

தற்போது உள்ள ஊனத்தின் தன்மை குறித்து சான்றிதழ் வழங்கும் நடைமுறை மிகவும் கடினமானது. அரசு தலைமை மருத்துவமனையில் / மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள கண் அறுவைசிகிச்சை நிபுணர் மட்டுமே சான்றளிக்கும் நிலை உள்ளது. இதன் அடிப்படையில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் முகாம் என்ற பெயரில் காலம் கடத்துதல், பல்வேறு தொலைவில் வாழும் மாற்றுத்திறனாளிகளை ஓரிடத்தில் குவிக்கும் நிலை உள்ளது. இந்நிலையினை மாற்ற கண் மருத்துவம் படித்து, இந்திய மருத்துவ கழகத்தில் ( All India Medical Council) பதிவு பெற்ற கண் மருத்துவர்கள் (Ophthalmologist) பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்களை வழங்க வழி வகை செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக பார்வை மூன்றில் கண்டவாறு இந்திய ரயில்வே , பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான சலுகை கட்டண படிவத்தில் மருத்துவ சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக (Form for the purpose of grant of rail concession to completely blind persons " To be used by Regd. Practitioner / Government Doctor/ Heads of the Institution for the blind recognized by Ministry of Welfare / Government of India or Social Welfare Department of the State Government) என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த நடைமுறையால் இந்திய ரயில்களில் கட்டண சலுகையில் பல கோடி பேர் பயன்பெற்று வருகின்றனர். எனவே பார்வைமாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டையில் ஊனத்தின் தன்மை குறித்த சான்றிதழ் பெறுவதற்கு இந்திய மருத்துவ கழகத்தில் (Medical Council of India) பதிவு செய்த தனியார் கண் மருத்துவரும் சான்றிதழ் வழங்கலாம் என நடைமுறை விதியில் திருத்தம் செய்வதன் மூலம் 50% மட்டுமே மாற்றுத்திறனாளி அடையாள அட்டை வழங்கியுள்ள நிலையினை மாற்றி 100% என்ற நிலையினை நடப்பு ஆண்டிலேயே எட்ட முடியும்.

6. **மாற்றுத்திறனாளிகள் குறித்த தரவுகளை கணினிமயமாக்குதல்**

அடையாள அட்டை தொடர்பான ஆவணங்களை கணினிமயம் படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் சிறுவர்கள், மாணவர்கள், வேலை வாய்ப்பு வேண்டுவோர், மாதாந்திர உதவித்தொகை வேண்டுவோர், வேலைவாய்ப்பில் உள்ளோர், பணி ஓய்வு பெற்ற மாற்றுத்திறனாளி அரசு அலுவலர் இவை போன்ற மாற்றுத்திறனாளி தொடர்பான அனைத்து தரவுகளும் அரசுக்கும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் பெரிதும் உதவும். இது போன்ற பணிகளை Labour and Employment website, TNPSC website போன்றவற்றில் நடைமுறையில் உள்ளது போல மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் இணையதளத்திலும் மேற் சொல்லப்பட்ட தரவுகள் இடம் பெறச் செய்ய வேண்டும்.

7. **மாதந்திர உதவித்தொகை**

மாற்றுத்திறனாளிகளின் பராமரிப்பு செலவிற்கென வழங்கப்படும் மாதந்திர உதவித்தொகை, ஓய்வூதிய தொகை ஆகியவை நபர் ஒருவருக்கு ரூபாய் 1000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கி வரும் உதவித் தொகைகள் பயனாளிகளை சென்றடைவதில் பல சிக்கல்கள் இருப்பதாக கருதுகிறோம். இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பின்வரும் நடைமுறை சீர்திருத்தங்கள் தேவை என கருதுகிறோம்.

1. மாதந்தோறும் ரூபாய் 1000 என வழங்கப்படும் உதவித் தொகை ஆண்டு ஒன்றிற்கு மொத்தம் ரூபாய் 12,000 வழங்கப்படுகிறது. அஞ்சல் மூலம் வழங்கி வருவதற்கு மாற்றாக பயனாளர்களின் வங்கி கணக்கில் ஆண்டுத் தொகையான ரூபாய் 12,000 மொத்தமாக செலுத்தி தவணை முறையில் மாதம் தோறும் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். இது போன்று பயனாளர் வங்கிக் கணக்கின் மூலமாக உதவித்தொகை வழங்கும் முறையினை பள்ளிக்கல்வித் துறை, உயர் கல்வித்துறை, நிதித் துறையால் அரசு ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படு வருகின்றது.

2. வங்கிக் கணக்கு இல்லாத மாதந்திர உதவித் தொகை பெறும் பயனாளிகளின் பெயரில் கட்டாயமாக புதியதொரு வங்கிக் கணக்கினை தொடங்க, வழிகாட்டும் திட்ட பணியாளர்களை கொண்டு ஏற்பாடு செய்ய வேண்டும்.

### 8. பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும் தையல் இயந்திரம் வழங்குதல்

பல்வேறு அமைப்புகள் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு தையல் தொழில் பயிற்சியினை வழங்கி வருகின்றன. குறிப்பாக மதுரை, சென்னை, திருச்சி போன்ற மாநகரங்களில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கென சிறப்பு தையல் பயிற்சி வகுப்புகள் அரசு உதவியுடன் நடைபெற்று வருகின்றது. அரசின் கொள்கை ஏடு 2012 – 2013, பக்கம் 59 –ல், உடல் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும், வாய் பேசாத மற்றும் காது கேளாத மாற்றுத்திறனாளிகளுக்கும் மின் தையல் இயந்திரம் வழங்கப்பட்டு வருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தினை பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவுப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பார்வை மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மேம்படும்.

### 9. கல்வித் உதவித்தொகை வழங்குதலில் சீர்திருத்தம்

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான கல்வித் உதவித்தொகைகள் பிற்படுத்தபட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ் வளர்ச்சித்துறை, கல்லூரி கல்வித் துறை (சிறப்பு உதவித்தொகை), போன்ற துறைகளால் வழங்கப்படும் கல்வித் உதவித்தொகைகள், மாணவர் பயிலும் - பள்ளி, கல்லூரி, கல்வி நிறுவனம், பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மூலமாக நேரடியாக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வித் உதவித்தொகை மட்டும் மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் மூலம் அவ்வலுவலகத்தில் வழங்கப்படுகிறது. இந்நடைமுறை மாற்றுத்திறனாளிகளை பலமுறை மாற்றுத்திறனாளி நல அலுவலகங்களுக்கு அலைகழிக்கிறது. பார்வை நான்கில் கண்டவாறு அரசு மாற்றுத்திறனாளிகளின் கல்வித் உதவித்தொகைக்காக ரூபாய் 3,69,00,000 நிதி ஒதுக்கியும் பல மாவட்டங்களில் மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காத நிலை உள்ளது. இந்நிலை மாற்றப்பட பின்வரும் பரிந்துரைகள் பின்பற்ற பட வேண்டும்.

1. மாணவர்கள் மாற்றுத்திறனாளி அலுவலகங்களுக்கு வந்து கல்வித் உதவித்தொகை வேண்டி விண்ணப்பிக்கும் நிலையினை மாற்றி மாணவர் பயிலும் கல்வி நிறுவனங்களில் மனு செய்ய வகை செய்ய வேண்டும்.

2. பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழங்கும் உதவித்தொகை கல்வித் உதவித்தொகை, வாசிப்பாளர் உதவித்தொகை என இரண்டாக பிரித்து வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பிரித்து வழங்குவதன் மூலம் வாசிப்பாளர் உதவித்தொகை மாணவர்களுக்கு உரிய நேரத்திலும், முழுமையாகவும் சென்றடைவதில்லை. பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்கள் வாசிப்பாளர் உதவியுடன் மட்டுமே கல்விப்பயில முடியும் என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும். இந்நிலையை மாற்றி பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வித் உதவித்தொகையும், வாசிப்பாளர் உதவித்தொகையும் ஒன்றே என கருதி ஒரே தொகையாக வழங்க வழி வகை செய்ய வேண்டும்.

3. கல்வித் உதவித்தொகை மாணவர்களின் வங்கிக்கணக்கில் மாற்றத்தக்கதாக காசோலைகள் வழங்கப்பட வேண்டும். கல்வித் உதவித்தொகை விண்ணப்பத்தில் மாணவர்களின் வங்கிக்கணக்கு தொடர்பான விவரங்களை குறித்த வினாக்களை இடம்பெற செய்ய வேண்டும்.

# பொருளடக்கம்


1. பாட நூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி (Magnifier)
2. ஜாஸ் மென்பொருள் (Jaws Software)
3. DVD இயக்கி (DVD Player)
4. அடையாள அட்டை வழங்குதல்
5. அடையாள அட்டை வழங்குதலை எளிமைப்படுத்துதல்
6. மாற்றுத்திறனாளிகள் குறித்த தரவுகளை கணினிமயமாக்குதல்
7. மாதந்திர உதவித்தொகை
8. பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும் தையல் இயந்திரம் வழங்குதல்
9. கல்வித் உதவித்தொகை வழங்குதலில் சீர்திருத்தம்